# இளைஞர் அணி சமூக வலைதள மாவட்டத் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு, சென்னை கிழக்கு, சென்னை வட கிழக்கு, சென்னை தென் மேற்கு ஆகிய மாவட்டங்களுக்கான நேர்காணல்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டார்!















இயக்கத்தின் முதன்மை அணியாம் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார். அந்த வகையில், நேற்று முன்தினம் (29.6.2025) சென்னை கிழக்கு, சென்னை வட கிழக்கு, சென்னை தென் மேற்கு மாவட்ட சமூக வலைதளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் எஸ்.ஜோயல் முன்னிலையில் நேர்காணல் செய்தார். அவர்களின் சமூக வலைதளப் பக்கங்களைப் பார்வையிட்டுஅவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்கள் கொண்டு வந்திருந்த ஆவணத் தொகுப்புகளையும் ஆய்வு செய்து, கழக பணி சிறக்க வாழ்த்தினார்.

### அமைச்சர் கே.என்.நேரு தலைமையில்

# தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மாவட்டங்களில் பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் முன்னிலை!

தஞ்சை. ஜூலை 1 -

கழக முதன்மைச் செயலாளரும், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் முன்னிலையில் தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட தி.மு.க. பாக நிலை முகவர்களுடனான (BLA2) ஆலோசனைக் கூட்டம் அந்தந்த மாவட்ட தலைநகரில் நடைபெற்றது.

28.06.2025 காலை 10.00 மணியளவில் பட்டுக்கோட்டை டி.எஸ்.வசந்தம் மஹாலில் தஞ்சை தெற்கு மாவட்ட பாக நிலை முகவர்களுடனான (BLA2) ஆலோசனைக் கூட்டமும், தஞ்சை மத்திய மாவட்ட பி.எல்.ஏ2 ஆலோசனைக் கூட்டம், மதியம்12.00 மணியளவில் தஞ்சை ஜெயராம் மஹாலிலும், மாலை 4.30 மணியளவில் கும்பகோணம் அன்பு மஹாலில் தஞ்சை வடக்கு மாவட்ட கூட்டமும் நடைபெற்றது.

இக்கூட்டங்களில் கழக முதன்மைச் செயலாளர் பேசியதாவது,

நம் கழக அரசின் சாதனைகளை ஒவ்வொரு வீடுகளுக்கும் கொண்டு செல்வது, தோழமைக் கட்சிகளுடன் இணைந்து பணியாற்றுவது, தேர்தலையொட்டி களப்பணியில் ஈடுபடுவது,

கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சியை பிரச்சாரம் செய்வது.

முக்கியமாக "ஓரணியில் தமிழ்நாடு" என்னும் தீர்மானத்தின் படி புதிய உறுப்பினர்களை கழகத்தில் இணைக்கும் தலையாயப் பொறுப்பு நம் பாக நிலை முகவர்களுக்கு உள்ளது.

அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலுக்கு தயாராகும் பொருட்டு இப்பொழுதிலிருந்தே தேர்தல் பணிகளை மேற்கொள்ள பாக முகவர்கள் செயல்பட வேண்டும்.

அதேபோல, தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த ஆதரவையும் பெற்றுள்ள நம் தலைவர் அவர்களின் கரத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் புதிய உறுப்பினர்களை கழகத்தில் இணைப்பது, தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது, கூட்டணிக் கட்சியினருடன் இணைந்து பணியாற்றுவது, சமூக வலை தளங்களில் தொடர்ச்சியாக களமாடி எதிர்கட்சிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்க வேண்டும் என பேசினார்.

இக்கூட்டங்களில் மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி., துரை. சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தி.பழநிவேல் வரவேற்புரையாற்றினார்கள். கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், கா.அண்ணாதுரை, டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், மாநகரச் செயலாளர்கள் சு.ப.தமிழழகன், சண்.இராமநாதன், தஞ்சை துணை மேயர் அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட தொகுதி பார்வையாளர்கள், மாநில, மாவட்டக் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்ச் செயலாளர்கள், பி.எல்.ஏ.2, பி.டி.எல். ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், தாராபுரம் கொளிஞ்சிவாடி அரசு நடுநிலைப்பள்ளியில் 27.06.2025 அன்று காலை உணவு அருந்திய மாணவர்களில் சிலர் உடல்நலக் குறைவு ஏற்பட்டு தாராபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததை அறிந்த மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் மருத்துவமனைக்கு நேரில் சென்று குழந்தைகளின் உடல்நிலை குறித்து மருத்துவர்களிடம் சிகிச்சை விவரங்களை கேட்டறிந்தார். உடன் நகர்மன்றத் தலைவர் கு.பாப்புகண்ணன், நகரச் செயலாளர் எஸ்.முருகானந்தம், நகர்மன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.யூசுப், மரக்கடை கணேசன், வழக்கறிஞர் அணி மாவட்டத் தலைவர் கே.செல்வராஜ் ஆகியோர் உள்ளனர்.

### ஆரூர் பாலாஜி, கத்தார் ப.அப்துல் ரஷீத் தலைமை! கத்தார் தி.மு.க. அயலக அணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் மாபெரும் மருத்துவ முகாம்!

## மதன்குமார் ஒருங்கிணைப்பில் நிகழ்ச்சி! ஷானவாஸ் பாவா பங்கேற்பு!

கத்தார், ஜூலை 1 -

கத்தார் தி.மு.க. அயலக அணி சார்பாக நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செம்மொழி நாள் விழா கொண்டாடப்பட்டது.

கத்தாரில் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான செம்மொழி நாளை முன்னிட்டு அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. வழிகாட்டுதலோடு, அமைப்பாளர் மதன்குமார் ஒருங்கிணைப்பில் கத்தார் அயலக தி.மு.க. NRTIA Qatar மற்றும் Naseem மருத்துவமனை இணைந்து நடத்திய மாபெரும் மருத்துவ முகாம் 27 ஜூன், வெள்ளி அன்று சிறப்பாக நடைபெற்றது.

கத்தார் தி.மு.க. அயலக அணி சார்பாக துணை அமைப்பாளர்கள் ஆரூர் பாலாஜி, கத்தார் ப.அப்துல் ரஷீத் தலைமையிலும், துணை அமைப்பாளர்கள் மேலூர் மதன், கோவை ஜி.எஸ்.ஆர். சத்தியராஜ், ஆற்காடு என். எஸ்.பரந்தாமன், வாளடி ராஜ்குமார், ஹக்கீம் ஆகியோர் முன்னிலையிலும், நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக ICBF அமைப்பின் தலைவர் ஷானவாஸ் பாவா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

நிகழ்ச்சியில் நிர்வாகிகள் குளச்சல் முகமது ரபீக், கத்தார் தி.மு.க. அயலக அணி இளைஞரணிச் செயலாளர் மற்றும் நிர்வாகிகளான தஞ்சை ஜி.செந்தில், குரும்பூர் தாஹிர், அ.அசாருதீன், அறந்தை செந்தில்குமார், மு.மெய்யநாதன், கீரமங்கலம் செந்தில் குமார், பாலகுமார் பிரகாஷ், ஏ.மனோஜ், ஆதிகேசவலு, கார்த்தி ஆகியோர் பங்கேற்புடன் மிகச் சிறப்பாக நடைபெற்ற இந்த நிகழ்வில், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் கத்தார் வாழ் தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகளான OTP அமைப்பின் தலைவர் வலியுல்லா, ஜனகரவி இப்ராஹிம் பாக்கர், எம்.கே.பி. அமைப்பின் சார்பில் ரெஜினா சாதிக் உசேன், கத்தார் வாழ் தமிழர்கள் வேலைவாய்ப்பு குழுத் தலைவர் இளங்கோவன் அப்துல் முத்தமிழ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கத்தார் வாழ் தமிழர்கள் சுமார் 450 நபர்கள் பதிவு செய்து 250 மேற்பட்டோர் மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.




மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. பாக நிலை முகவர்கள்2 (BL A2)ஆலோசனைக் கூட்டம் மயிலாடுதுறையில் சிக்னேச்சர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு சிறப்புரையாற்றினார். உடன் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செ.இராமலிங்கம், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், தொகுதி பார்வையாளர்கள் மயிலாடுதுறை தொகுதி என். இளையராஜா, பூம்புகார் தொகுதி மன்னை த.சோழராஜன், சீர்காழி தொகுதி மு.தினேஷ்குமார், மாவட்ட அவைத் தலைவர் கே.ஜி.சினிவாசன் மற்றும் பலர் உள்ளனர்.